அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI





Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


அ.எண் : 08 / 2018
தேதி : 17.01.2018

## பெட்ரோல், டீசல் விலை அதிகரிப்பு

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ரா.சரத்குமார் கண்டனம்.

கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத அளவு பெட்ரோல், டீசல் விலைகள் அதிகரித்து உச்ச நிலையை எட்டியுள்ளன.

தினந்தோறும் சிறுக சிறுக அதிகரித்து, கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் லிட்டருக்கு சுமார் 3 ரூபாய் அளவுக்கு பெட்ரோல், டீசல் விலைகள் அதிகரித்திருப்பது கண்டனத்திற்குரியதாகும்.

ஜிஎஸ்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கை போன்ற பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் பொதுவாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைய வேண்டும். மேலும் கடந்த இரு காலாண்டுகளில் வரிவசூல் கடந்த ஆண்டை விட அதிகரித்திருப்பதாக மத்திய நிதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அப்படி இருக்கும்போது பெட்ரோல், டீசல் விலைகளை அதிகரித்திருப்பது வரவேற்கத்தக்கது அல்ல.

பெட்ரோல், டீசல் விலைகள் அதிகரிப்பின் மூலம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும். எனவே, பெட்ரோல், டீசல் விலைகள் குறைக்கப்படட வேண்டும் என்பதே அனைவரும் வலியுறுத்த விரும்புவது.

ஏற்கெனவே, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு இவற்றை ஜிஎஸ்டிக்குள் கொண்டு வர வேண்டும் என்றும், பெட்ரோல், டீசல் விலைகளை குறைப்பதற்கு அம்முறையே சரியானதாக இருக்கும் என்பதை வலியுறுத்தி இருந்தோம்.

..2


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624





எனவே மக்கள் நலன், தொழில்கள், வணிகம் உள்ளிட்ட அனைத்தையும் பாதிக்கக்கூடிய பெட்ரோல், டீசல் விலைகளை உடனடியாக குறைப்பதற்கு மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும். இவற்றை ஜிஎஸ்டி வரிவிதிப்பின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதையும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com